**செய்தி வெளியீடு எண்: 093** **நாள்: 04.02.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**2019–2020–ம் கல்வியாண்டிற்கு தொழிற்பள்ளிகள் துவங்குவதற்கான அறிவிப்பு**

2019–2020 ஆம் கல்வியாண்டிற்கு 01.07.2019 முதல் புதிய தொழிற்பள்ளிகள் துவங்குதல், தொடர் அங்கீகாரம் பெறுதல், தொழிற்பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகின்றன. 11.01.2019 முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

2019–2020 ஆம் கல்வியாண்டிற்கு அங்கீகாரம் பெற ஒரு தொழிற்பள்ளி ஒரு இணையதள விண்ணப்பம் சமர்ப்பித்தால் போதுமானது. விண்ணப்பிக்கவுள்ள அனைத்து தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகளுக்கு தேவையான விவரங்கள் அனைத்தும் ஒரு விண்ணப்பத்தில் மட்டுமே அளிக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் ஒவ்வொரு தொழிற்பிரிவிற்கும் விண்ணப்ப கட்டணம் செலுத்த வேண்டும்.

விண்ணப்ப கட்டணம், ஆய்வு கட்டணம் மற்றும் விண்ணப்பிக்கும் வழிமுறைகள் ஆகியவை இணையதளத்தில் உள்ள Prospectusல் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்:30.04.2019. இதற்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டும் விவரம் பெறலாம்.

தொலைபேசி எண் : 044-22501006

Email ID : detischennai@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**